
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 159 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 13 செவ்வாய்க்கிழமை (27.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஓமந்தையில் கார் - டிப்பர் கோர விபத்து
# யாழ்.இந்தியத் தூதரக அதிகாரி பிரபாகர சர்மா உயிரிழப்பு
### அவரது மனைவி; மகன்; மாமன் படுகாயம்

15ஆம் பக்கம் பார்க்க



# தள்ளாடுகிறது அநுர அரசு
# தளர்வுற்றன முதலீடுகள்
### எச்சரிக்கின்றார் லக்ஷ்மன் யாப்பா



(கொழும்பு)

அநுர அரசாங்கத்தின் இயலாமை காரணமாக முதலீட்டாளர்கள் நாட்டிலிருந்து வெளியேற எத்தனிப்பதாகவும் இதனால் பலர் வேலையிழப்பர் எனவும் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### வேட்பாளர்கள் செலவறிக்கை
## சமர்ப்பிக்கத் தவறின் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான செலவு அறிக்கைகளை இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்குள் சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என 15ஆம் பக்கம் பார்க்க

### முன்னாள் அமைச்சர்
## மகிந்தானந்த பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை இந்த உத்தரவைப் 15ஆம் பக்கம் பார்க்க

## இவ்வருட இறுதிக்குள் நாடு வீழ்ச்சியுறும்
### வஜிர அபேவர்த்தன ஆருடம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் ஆரோக்கியமானதாக இல்லை. இந்நிலை தொடர்ந்தால் வருட இறுதிக்குள் நாடு 15ஆம் பக்கம் பார்க்க

### நியூசிலாந்து துணைப் பிரதமர்
## ஜனாதிபதி அநுரவுடன் முக்கிய கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நியூசிலாந்தின் துணைப் பிரதமரும் வெளிவிவகார அமைச்ச 15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.போதனா வைத்தியசாலையில்
## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்



15ஆம் பக்கம் பார்க்க

### 27 இலட்சத்துக்கும் அதிக பணம் அபேஸ்
## மோசடிக் குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது

(கட்டைக்காடு)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் குடும்பப் பெண் ஒருவரிடம் வெளிநாடு அனுப்புவதாகக் கூறி 27 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை மோசடி செய்த பெண் 15ஆம் பக்கம் பார்க்க

## புதிய பயங்கரவாத தடைச்சட்டம் எதற்கு?
### தமிழ்த் தலைவர்கள் கேள்வி



(யாழ்ப்பாணம்)

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையில் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் எதற்காக இயற்றுவதற்கு முயற்சிக்கின்றது என்று தமிழ்த் 02ஆம் பக்கம் பார்க்க

NLB
ஜய JAYA ජය
கையிலே காசு
நவீன மோட்டார் வண்டி
இலட்சம் பரிசுகள்
ELECTRIC மோட்டார் சைக்கிள்கள்
ரூ. 50,000/-
சீட்டிழுப்பு யூன் 06
100 லொத்தர்களுக்கு மேல் கொள்வனவு செய்ய அழையுங்கள் நாங்கள் உங்கள் கைகளுக்கே கொண்டு வந்து தருகின்றோம். 0114607080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புதிய பயங்கரவாத...

தலைவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை இயற்றுவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு பொது மக்களின் அபிப்பிராயத்தினை பகிரங்கமாகக் கோரியுள்ளது. இந்நிலையில், அவ்விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில், பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்க வேண்டும் என்று நாம் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கோரிவருகின்றோம். எனினும் அந்தச் சட்டம் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டே வருகின்றது.

விசேடமாக குறித்த சட்டத்தின் மூலமாக தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்ததோடு போரின் பின்னரான சூழலில் அரசியல் ரீதியாக பழிவாங்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், பதிவு செய்வதற்கும் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதனைத் தாண்டிச் செயற்படுபவர்கள் மீது திட்டமிட்டு பயங்கரவாதச் சட்டம் பாய்கின்ற நிலைமை தான் உள்ளது.

அந்தவகையில், புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தினை அரசாங்கம் கொண்டு வருவதற்கு முயற்சிகளை எடுத்துள்ளமையானது, அதன்மீதான சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது. அநுர அரசாங்கமும், அடக்குமுறைகளைச் செய்வதற்கே முனைகின்றது என்றே வெளிப்படுகின்றது என்றார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஊடகப்பேச்சாளரும், பதில் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் இரண்டு தடவைகள் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலீடாக புதிய சட்டமொன்றை இயற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அந்தச்சந்தர்ப்பங்களில் அப்போதைய அரசாங்கம் கலந்துரையாடல்களுக்கு அழைத்தபோது எதிர்க்கட்சியில் இருந்த அநுரகுமார திஸாநாயக்கவும் அவரது கட்சியினரும் எந்தவொரு கலந்துரையாடல்களிலும் பங்கேற்கவில்லை.

அவர்கள் அக்காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்துக்களுக்கு இடமில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலீடாக புதிய சட்டங்கள் உருவாக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றே கூறினார்கள்.

ஆனால் ஆட்சி அதிகாரத்தினை பெற்றவுடன் பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்துவதோடு, அதற்கு பதிலீடாக புதிய சட்டத்தினைக் கொண்டுவருவதற்கும் முயற்சிக்கின்றார்கள். அதிகாரத்துக்கு வந்தவுடன் தமது கொள்கையிலிருந்து விலகிப் பயணிக்கின்றமையானது இதன் மூலமாக அம்பலமாகியுள்ளது என்றார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவரும், ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட அமைப்பாகவே ஜே.வி.பியினர் இருக்கின்றார்கள். அப்போது அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தினார்கள். போராடினார்கள். எனினும் அவர்கள் அதிகாரத்துக்கு வந்துள்ள நிலையில் அச்சட்டத்தினை பயன்படுத்தி வருகின்றார்கள். அதுமட்டுமன்றி, ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா.மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச தரப்பு பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. எனினும் அரசாங்கம் அந்த வலியுறுத்தல்களையெல்லாம் கருத்தில் கொள்ளாது புதிய சட்டமொன்றை உருவாக்குவதற்கு முனைகின்றது என்றார்.

(ந-4,7)

## தள்ளாடுகிறது...

ஆடை உற்பத்தித் துறையை மேற்கோள்காட்டி அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையிலுள்ள ஆடை தொழிற்சாலைகளை மூடி, அவற்றை இந்தியாவில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடுகின்றன. அவ்வாறு இடம்பெற்றால் எதிர்காலத்தில் இலங்கையில் ஆடை தொழிற்சாலை முற்றாக வீழ்ச்சியடையும். வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் இயலாமையையே இவை வெளிப்படுத்துகின்றன.

மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த அரசாங்கம் மக்களின் அதிருப்திக்குள்ளாகியுள்ளது. இதற்கு முன்னர் எந்தவொரு அரசாங்கமும் குறுகிய காலத்துக்குள் தேர்தலொன்றை எதிர்கொண்டு, அதில் இந்தளவுக்கு பின்னடைவை எதிர்கொண்டதுமில்லை. அரசாங்கத்தின் இயலாமை தற்போது வெளிப்பட்டுள்ளது. தமது இயலாமையை மறைப்பதற்காக தொடர்ச்சியாக பொய்களைக் கூறி வருகின்றனர். அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும், விரைவில் கூட்டு அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார். ஆனால் இதுவரையில் எந்தவொரு கூட்டு அறிக்கையும் வெளியிடப்படவில்லை.மறுபுறம் இந்தியாவுடன் இரகசிய பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் தொடர்பான எவ்வித தகவலும் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

சுதந்திர வர்த்தக வலயத்தில் நெக்ஸ் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இந்தியா, பிரித்தானியாவுடன் அண்மையில் செய்து கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் 99 சதவீத வரி குறைக்கப்பட்டுள்ளது.எனவே இந்த நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை இந்தியாவில் முன்னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளன. இலங்கையில் எதிர்காலத்தில் ஆடைத் தொழிற்சாலைகள் முற்றாக வீழ்ச்சியடையும் என்பதற்கான முன்னெச்சரிக்கையாகவே இந்த தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. அவ்வாறு இடம்பெற்றால் ஆயிரக்கணக்கானோர் தொழிலை இழக்க நேரிடும். அரசாங்கம் அதற்குத் தயாராகிறதா? வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் எந்தவொரு அமைச்சரும் எந்தவொரு நாட்டுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில்லை.

அவ்வாறிருக்கையில் எவ்வாறு வெளிநாட்டு முதலீடுகளைப் பாதுகாக்க முடியும்? நாட்டு மக்களின் எதிர்காலம் அச்சுறுத்தல் மிக்க நிலைமையிலேயே காணப்படுகிறது என்றார்.

(ந-4,7)

## மரண அறிவித்தல்

மலர்வு
23 - 06 - 1946



உதிர்வு
26 - 05 - 2025

### சிதம்பரப்பிள்ளை அருளேஸ்வரி

துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை அருளேஸ்வரி அவர்கள் நேற்று 26.05.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெட்சணாமூர்த்தி - இளையதங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும் செல்வராஜா(கனடா), புவனேஸ்வரி(இஞ்சி அக்கா), இராஜேந்திரராஜா, மகேந்திரராஜா(ஜேர்மன்), தவராசா(சுவிஸ்), யோகேஸ்வரி(ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிவரூபன்(அசோகன்), சிவகுமார்(ஆசிரியர், யா/ விக்னேஸ்வரா கல்லூரி), பவானி(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் கோப்பாய்), சிவரஞ்சன்(பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம் அநுராதபுரம்), சிவகாந்தன்(உரிமையாளர், சென்றல் சேவிஸ்ரேசன் நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரமூர்த்தி(ஆசிரிய வளவாளர், வடமராட்சி கல்வி வலயம்), கோமதி(ஆசிரியர், யா/ விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை), நர்மதா(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை கரவெட்டி), கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமியும் நிலக்ஷன்(பொறியியல் பீடம் பேராதனை பல்கலைக்கழகம்), ரஜீவன், அபிஷேகன், லாசகன், லாஷனா, கஜானா, ஜனுசன், சுவஸ்திகா, ஆருஷ், ஆதேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.05.2025 செவ்வாய்க்கிழமை பி.ப 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

(1172)

## விண்ணக வாழ்வின் 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் கந்தசாமி லில்லிக்கிறேஸ் செல்வமணி

மண்ணக வாழ்வில் 30.03.1940
விண்ணக வாழ்வில் 27.05.2024


ஓர் ஆண்டு ஆனாலும்
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உம் அன்பு மறப்பதில்லை அம்மா,
நீர் இருந்த காலங்கள்
எங்கள் நினைவின் கல்வெட்டுக்கள்,
உம் அருமை நினைவுகளால்,
புனிதமடையும் எம் வாழ்வு.

(4396)

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

நீங்காத நினைவுகளுடன்
மக்கள் - மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

## இதய அஞ்சலி



பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக்குருக்கள் பிரபாகரசர்மா

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில்
எமது செயற்பாடுகளுக்கு உற்ற
உறுதுணையாய் நின்று கலை கலாசார
உத்தியோகத்தராக இருந்து
எமக்கு நல்வழி காட்டிய
அருமை நண்பன் பிரபா அவர்கட்கு
எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர்
அஞ்சலியைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-3057)

சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக முன்னேற்ற நடவடிக்கைகளிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது!

## உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி

(கொழும்பு) ..............................

**சமூக முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் ஒருபோதும் மாற்ற அனுமதிக்காது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**



தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக அரசியலில் இணையும் உள்ளூராட்சி நிறுவனங்களின் கதவுகளைத் திறக்கத் தேசிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3,926 உறுப்பினர்களில் இருந்து நாட்டைப் பொறுப்பேற்கும் ஒரு தலைவர் உருவாக வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

உறுப்பினர்கள் வெளியிடப்பட்டவுடன் 152 உள்ளூராட்சி நிறுவனங்களை நிறுவுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும், மேலும் 115 சபைகளின் அதிகாரம் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மக்கள் ஆணையின் அதிகாரம் தேசிய மக்கள் சக்திக்கே உள்ளது என்றும், தேசிய மக்கள் சக்திக்கு எதிராகச் செயற்படும் குப்பைக் குவியல்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கான மக்கள் ஆணையைப் பெறவில்லை என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மீண்டும் அதிகரித்த தேங்காய் விலை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் உப்பு பற்றாக்குறைக்கு மத்தியில் தற்போது தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது நுகர்வோர் முன்னணி குறித்த விடயத்தினைத் தெரிவித்துள்ளது.

அதன்படி, தேங்காய் ஒன்று 200 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுவதாக அந்த முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது சந்தையில் 245 ரூபா முதல் 250 ரூபா வரையில் தேங்காய் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த வருடத்தின் மே மற்றும் ஜூன் மாதங்களில் தேங்காய் அறுவடையில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக லுணுவில தேங்காய் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தேங்காய் விலை குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தேங்காய் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

விசேட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் விசேட உதவித்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித்தொகை 20,000/= இருந்து 50,000/= வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி-8)

### விமல் உள்ளிட்ட

# 6 பேருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட 6 பேருக்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

2016 ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாட்டிற்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் காரியாலயத்திற்கு முன்பாக பாதையை இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக விமல் வீரவன்ச உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் ஆராயப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத் தரணி சுகயீனமடைந்துள்ள காரணத்தால் வேறு ஒரு தினமொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் வழக்கு ஜூன் 23 இற்கு ஒத்திவைக்கப்பட்டது. (நி)

# இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் சபாநாயகரை சந்தித்தார்



(கொழும்பு)

இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் ரூவன் ஜேவியர் அசார் , சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை அண்மையில் பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இந்த சந்திப்பில் தூதுவர் அசார் சபாநாயகரின் நியமனம் தொடர்பில் வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், இஸ்ரேலிய சபாநாயகரின் வாழ்த்துக்களையும் பகிர்ந்துகொண்டார்.

சுற்றுலா, விவசாயம், விஞ்ஞானம், டிஜிட்டல் தொழில்நுட்பம், வர்த்தகம், முதலீடு மற்றும் மருத்துவத் துறைகள் உள்ளிட்ட பிரதான துறைகளில் இலங்கை மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை - இஸ்ரேல் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை பத்தாவது பாராளுமன்றத்தில் ஸ்தாபிப்பதன் முக்கியத்துவத்தை தூதுவர் வலியுறுத்தினார். (நி-8)

# நடப்பாண்டில் இலங்கையின் ஏற்றுமதி 5.5 பில்லியன் டொலர்களாக உயர்வு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதித்துறை குறிப்பிடத்தக்க மீள் தன்மை மற்றும் நிலையான முன்னேற்றத்தைக் காட்டியது.

மொத்த ஏற்றுமதிகள் 5, 583. 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டின. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது 6.9% வலுவான அதிகரிப்பைக் குறிக்கிறது.

இந்த மேல்நோக்கிய போக்கு முக்கிய தொழில்களில் புதுப்பிக்கப்பட்ட உத்வேகத்தை பிரதிபலிக்கிறது. மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய வர்த்தக நிலப்பரப்பில் இந்தத் துறையின் தகவமைப்புத் திறனை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. ஏப்ரல் 2025 இல் பொருட்கள் மற்றும் சேவைகள் உட்பட மொத்த ஏற்றுமதிகள் 1,292.63 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டின.

இது ஏப்ரல் 2024 ஐ விட 8.74% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைக் குறிக்கிறது. இது இலங்கையின் ஏற்றுமதித் துறையின் மீள்தன்மை மற்றும் சந்தைகளை பன்முகப்படுத்துவதற்கும் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் மூலோபாய முயற்சிகளின் நேர்மறையான தாக்கத்தை பிரதிபலிக்கிறது. (நி)

# அதிக புகை வெளியிடும் வாகனங்களை கண்டறிய அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

அதிகப்படியான புகையை வெளியிடும் வாகனங்களைக் கண்டறிந்து, குற்றவாளிகள் மீது முறையான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இதற்கமைய அதிகப்படியான புகையை வெளியிடும் வாகனங்களைக் கண்டறிந்து, குற்றவாளிகள் மீது முறையான நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸ் சிசிடிவி கமராக்களைப் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. வாகன புகை முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பொலிஸ் சிசிடிவி தரவுகளைப் பயன்படுத்துவதோடு,

சிசிடிவி கமரா அமைப்பை நவீனமயமாக்கவும் மேலும் விரிவுபடுத்தவும் இந்த நிதியம் முழு ஆதரவையும் வழங்கும் என்று டி.எம்.டி ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். இதேவேளை வாகன புகை பரீட்சித்தல் நம்பிக்கை நிதியம், வாகன புகைகளால் அதிகரித்து வரும் சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய ஏற்கனவே பல உத்திகளை செயற்படுத்தி வருகிறது எனவும் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய கிரிக்கெட் அணிக்கு தலைவராகிறார் சுப்மன்கில்



இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய அணித் தலைவராக சுப்மன்கில் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் சுற்றுப்பயணத்திற்கான அணியை கடந்த சனிக்கிழமை இந்திய அணி அறிவித்துள்ளது.

இந் நிலையில் புதிய அணித் தலைவராக சுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்திய அணித் தலைவராக இருந்த ரோஹித் சர்மா, டெஸ்ட் களத்தில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்ததை அடுத்து அணித் தலைவர் வெற்றிடத்திற்கு சுப்மன்கில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது அணித்தலைவர் பதவிக் காலம் அடுத்த மாதம் முதல் தொடங்க உள்ளது. இதற்கிடையில், அணியின் துணைத் தலைவராக ரிஷப் பந்த் நியமிக்கப்பட்டுள்ளார். (நி-3-8)

## நோர்வே செஸ் தொடர் குகேஷ் - கார்ல்சன் மோதல்



பிரசித்திபெற்ற நோர்வே செஸ் தொடர் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இந்தத் தொடரில் உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடுகின்றனர்.

இன்று தொடங்க உள்ள முதல் சுற்றில் இந்தியாவின் குகேஷ், உலகின் நம்பர் 1 வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சன் உடன் மோதுகிறார்.

மற்றொரு இந்திய வீரரான அர்ஜுன் எரிகேசி சீனாவின் வெய் யீ உடன் மோதுகிறார்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் கோனேரு ஹம்பி, சக நாட்டு வீராங்கனையான ஆர்.வைஷாலி உடன் மோதுகிறார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற நோர்வே செஸ் தொடரில் கார்ல்சன் சம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-3)

## ஸ்ட்ராஸ்போக் ஓபன் டென்னிஸ் சம்பியனானார் ரிபாகினா



ஸ்ட்ராஸ்போக் ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்சில் உள்ள ஸ்ட்ராஸ்போக் நகரில் நடைபெற்றது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில் கஜகஸ்தானின் எலினா ரிபாகினா, ரஷ்யாவின் சாம்சோனோவா உடன் மோதினார்.

ரிபாகினா முதல் செட்டை 6-1 என கைப்பற்றினார். இரண்டாவது செட்டை சாம்சோனோவா 7-6 (7-2) என வென்றார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை ரிபாகினா 6-1 என கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். (நி-3)



இலங்கையின் கராத்தே தற்காப்பு கலை ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டு நிறைவினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட கராத்தே தோ சம்மேளனத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிறைவு விழா மிகவும் சிறப்புற இடம்பெற்றிருந்தது. (படம்:- சதீஸ்)

## இலங்கை ரக்பி அணிக்கு புதிய பயிற்சியாளர் நியமனம்



இலங்கை ரக்பி அணியின் தலைமைப் பயிற்சியாளராக ரோட்னி கிப்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நியூசிலாந்தின் ஆல் பிளாக்ஸ் செவன்ஸ் அணியின் முன்னாள் உதவிப் பயிற்சியாளராக கடமையாற்றியுள்ளார்.

ஆசிய ரக்பி பிரதான நான்கு அணிகள் மோதும் ரக்பி டாப் 4 ரக்பி தொடர் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ள நிலையில், குறித்த தொடர் நிறைவடையும் வரையில் ரோட்னி கிப்ஸ் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்படவுள்ளார். (நி-3-8)

## இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் புனித அந்தோனியார்
## ஆலயத்தின் 175 ஆவது யூபிலி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு யூபிலி பெரு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.45 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

4 ஆம் திகதி புதன்கிழமை முதல் நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு செபமாலைத் தியானத் துடன் ஆரம்பமாகும்.

அத்துடன் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணி க்கு நற்கருணை வழிபாடும், மறு நாள் வெள்ளிக் கிழமை முதல் திருப்பலி காலை 5.15 மணிக்கும், அதனைத் தொடர்ந்து பெரு விழாத் திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாக வுள்ளதென ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (நி-3)


சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 30.04.2025 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எங்கள் குடும்ப உறுப்பினர்

### அமரர். செல்வி. புவனேஸ்வரன் யசிந்தா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள்
28.05.2025 நாளை புதன்கிழமை காலை 08.00 மணியளவில்
கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
30.05.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது.
எனவே அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.) (சி-3051)

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்-குடும்பத்தினர்.
கஜிந்தன்(சகோதரன்) ஊடகவியலாளர்
077 280 9327


# போதைப் பொருட்களுடன் இரண்டு பெண்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று இரண்டு பெண்கள் விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட வெளி நாட்டு சிகரட்டுகளுடன் சந் தேகநபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். கம்பளை மற்றும் ஹுனு முல்ல ஆகிய பிரதேச ங்களைச் சேர்ந்த 30 மற்றும் 47 வயதுடைய இரண்டு பெண்களே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான இரண்டு பெண்களும் நேற்று முன்தினம் அதிகாலை வெளி நாட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்துள்ளனர்.


இதன்போது, விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இரண்டு பெண்களும் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 58,000 வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 290 சிகரட்டு காட் டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி)


# நினைவஞ்சலி

38ம் ஆண்டு | 27ம் ஆண்டு | 20ம் ஆண்டு



திரு.அ.முத்துராஜா
(முன்னாள் உப தபாலக அதிபர் தொண்டைமானாறு)
தோற்றம்: 03.04.1930
மறைவு: 27.05.1987



திரு.மு.பொன்னம்பலம்
(இளைப்பாறிய அதிபர்)
தோற்றம்: 25.12.1914
மறைவு: 02.01.1998



திருமதி.பொ.இராசமணி
தோற்றம்: 25.07.1916
மறைவு: 26.02.2005

காலங்கள் பல உருண்டோடினாலும் உம்
நினைவலைகள் எம்மைவிட்டகலா
உம் வழித்தடங்கள் சென்றவிடமெல்லாம்
பார் போற்ற வாழ்ந்தீர்களே.

[சி-3049]

"முத்துவாசா" கெருடாவில்,
தொண்டைமானாறு.

தகவல்-குடும்பத்தினர்.


# ஜூன் 3 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை கூட விருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அண்மையில்கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது. (நி)

# இராசிபலன்

27.05.2025
வைகாசி 13, செவ்வாய்க்கிழமை
அமாவாசை முற்பகல்9.17 மணிவரை

கார்த்திகை காலை 6.08 மணிவரை
ரோகிணி பின்னிரவு 4.44மணிவரை
சுப நேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சந்திராஷ்டமம்-
சுவாதி

**வளவன்**



**மேஷம்**: சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், யோசிக்காமல்செய்த காரியங்களில் கூட முன்னேற்றமுண்டு.



**ரிஷபம்**: பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.



**மிதுனம்**: குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவான நாள்



**கடகம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.



**சிம்மம்**: வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் மேலோங்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.



**கன்னி**: நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு கள் விலகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**துலாம்**: அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.



**விருச்சிகம்**: சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், இரவு பகலாகப் பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும்.



**தனுசு**: கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**மகரம்**: பிள்ளைகள் வழியில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




**கும்பம்**: பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்துசேரலாம், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், வாகன சுகமுண்டு.



**மீனம்**: இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

இளமையில் சோம்பல் முதுமையில் திண்டாட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை 1975 நட்புகள் அனுசரணையில் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் மற்றும் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹாலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (படம்:- மகாலிங்கம்)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் றோ.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் க. நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. ஜெயகரனும், சிறப்பு விருந்தினர்களாக மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.பிரதீஸ் மற்றும் நல்லூர் கால்நடை வைத்திய அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கதீஸ்வரன் காயத்திரி ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கிளி/ பூநகரி நல்லூர் மகாவித்தியாலய ஆசிரியரும், யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் முன்னாள் ஆசிரியருமாகிய சி.ரஜீவ் மற்றும் யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை ஆசரியரும், யா/ கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் முன்னாள் ஆசிரியருமாகிய திருமதி சிவனேஸ்வரி ஞானசேகரன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஙி-8-3)

## எழுதா வரியோ பாடல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

தாருவின் குரலில் ஜெயந்தனின் இசையில் மகியின் வரிகளில் "எழுதா வரியோ" பாடல் Trendy Routez YouTube தளத்தில் வெளியாகி இருக்கின்றது .

இப்பாடலை ரமணி இயக்கி ஒலிப்பதிவு செய்துள்ளார். குரு படத்தொகுப்பினைச் செய்துள்ளதுடன் பாடலில் தாருவுடன் கவின்டியாவும் நடித்திருக்கிறார்கள். (ஙி-3)

## பனம் கைப்பணிப் பொருட்கள் விரைவில் அமெரிக்காவுக்கு



(சாவகச்சேரி)

பனைசார்ந்த கைப்பணிப் பொருட்களுக்கு சர்வதேச சந்தையில் அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கும் நிலையில் இலங்கையினுடைய பனம் கைப்பணிப் பொருட்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான தயார்ப்படுத்தல்கள் மிக விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் பனை அபிவிருத்திச்சபை தற்போது அமெரிக்கச் சந்தையை குறிவைத்து தனது கைப்பணிப் பொருட்களை தயார் செய்து வருகிறது.

பனம் கைப்பணிப் பொருட்கள் மிகவிரைவில் உலக சந்தையில் தனக்கான தனியிடத்தைப் பிடிக்கவுள்ளன. அதன் பின்னர் பனம் கைப்பணித்தொழிலை பெண் தொழில் முனைவோருக்கான சிறந்த தொழிலாக மாற்றுவோம். ஏனைய கைப்பணிப் பொருட்களைப் போல் அல்லாது பனம் பொருட்களுக்கு தனியான கவர்ச்சி மற்றும் தனித்துவம் உள்ளது.

அந்தவிதத்தில் பனம் கைப்பணிப் பொருட்களை ஏற்றுமதி செய்து இலங்கைக்கு அந்நிய செலவாணியை ஈட்டிக்கொடுக்கும் புதிய மார்க்கமாக இது அமையும் என நம்புகிறோம். என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ஙி-8-30)




மல்லாகம் திருமருஞ்சோலை பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த வைகாசி பெரும் பொங்கல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 450 |
| தக்காளி | 700 | 750 | 800 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 200 |
| கோவா | 450 | 500 | 500 | 500 |
| கரட் | 850 | 950 | 800 | 900 |
| பூசணி | 150 | 180 | 180 | 200 |
| புடோல் | 150 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 150 | 120 |
| பாகற்காய் | 600 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 250 | 180 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 200 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 200 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 500 | 600 |
| கறிமிளகாய் | 800 | 800 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 550 | 1000 | 1200 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | 360 |
| கீரை - 1 பிடி | 120 | 80-120 | 150 | 150 |
| தேசிக்காய் | 400 | 250 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 800 | 800 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- |

# சட்டவிரோதமாக மாடுகளை கடத்திய ஐவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக மாடு கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் ஐவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி ஏழு மாடுகளை வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்ற போது காரைநகர் பகுதியில் வைத்து இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விதான பத்திரனவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஙி-104-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என.

மேற்படி பிரச்சினைகளுக் குரிய தீர்வுகள் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள் என.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு மத்தி யிலேயே போதைப்பொருள் கடத்தலும் இடம்பெறு கின்றது. எனவே, இந்திய

# கடல் வளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு



(கொழும்பு)

**இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற் கும், மீன்பிடி என்ற போர்வையில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன் னெடுக்குமாறு கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.**

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமை ச்சுக்கும் பாதுகாப்பு அமைச் சுக்கும் இடையிலான கலந் துரையாடலொன்று பாராளு மன்ற வளாகத்தில் அண்மை யில் நடைபெற்றது.

கடற்றொழில், நீரியல் மற் றும் கடல்வளங்கள் அமை ச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் தலைமையில் நடை பெற்ற இக்கலந்துரையாட லில் பாதுகாப்பு பிரதி அமை ச்சர் அருண ஜெயசேகர, கடற்றொழில், நீரியல் மற் றும் கடல்வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, இரு அமைச்சுகளினதும் செயலா ளர்கள் உள்ளிட்ட அதிகாரி கள் மற்றும் கடற்படை தளபதி உள்ளிட்டோரும் பங்கேற் றிருந்தனர்.

காணிப்பிரச்சினை, மீன் பிடி துறைமுகங்களில் நில வும் பிரச்சினைகள், தடை செய்யப்பட்ட உபகரணங்க ளைப் பயன்படுத்தி சட்ட விரோதமாக மீன்பிடி நட வடிக்கையில் ஈடுபடும் விவ காரம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற் பரப்புக்குள் அத்துமீறுவது உள்ளிட்ட விடயங்கள் சம் பந்தமாக இதன்போது விரி வாக கலந்துரையாடப்பட்டுள் மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கும், இலங்கை கடல் வளத்தை பாதுகாப்பத ற்கும் தேவையான அனை த்து வித நடவடிக்கைகளை யும் முன்னெடுக்குமாறு இக் கூட்டத்தில் கடற்படையின ருக்கு ஆலோசனை வழங் கப்பட்டுள்ளது. (நி)


# INVITATION FOR BID 2025/3
# DELFT PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The **Chairman, Local Authority Procurement Committee**, on behalf of the **Delft Pradeshiya Sabha** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents.
4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-05-27 To 2025-06-11** during **09:00 hrs and 14:00 Hrs.**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Delft Pradeshiya Sabha (T. P:021 221 5211, e.mail: tsecretarydelft@yahoo.com) from 9:00 hrs to 14:00 Hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below**. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee,Delft Pradeshiya Sabha on or before as stated in table below**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Delft Pradeshiya Sabha as stated in table below**.
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | from 2025-05-27 To 2025-06-11 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-06-02 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.30 P.M on 2025-06-11 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(7)/2/PSDG/2025/04 | Improvement Facilities of Manalthurai beach at Delft | 2.00 | 60 | C9 or Above (Building) | 3000.00 | 20000.00 | 27.08.2025 | 30.07.2025 |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Delft Pradeshiya Sabha,**

(C-3052) 27-05-2025




யாழ்ப்பாணம் சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.


**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**பொதுச்சபை உறுப்பினர்களுக்கான அழைப்பு**

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தம்பர் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திருமதி.C.S.R செல்வகுணாளன் அவர்களது பங்குபற்றுதலுடன் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு.கு.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பொது கூட்டத்தில் சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்வதோடு பிரேரணைகள் இருப்பின் எதிர்வரும் 10.06.2025 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரேரணைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**பே.கஸ்ரோ**
**செயலாளர், பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**
kpcastro81@gmail.com

**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(C-3050)

மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உக்ரைன் மீது ரஷ்யா வான்வழித் தாக்குதல் இருநாட்டு தலைவர்களையும் விமர்சித்த ட்ரம்ப்

(வோஷிங்டன்)

உக்ரைன் மீது ரஷ்யப் படையினர் நடத்திய வான் வழித் தாக்குதல் உலக ளவில் பெரும் அதிர்வலை களை ஏற்படுத்தியுள்ள நிலையில் புடின் "முற்றிலும் பைத்தியமாகி விட்டார்" என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.



உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் மற்றும் ஏவு கணைத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

கடந்த மூன்று ஆண்டு களில் இல்லாத அளவுக்கு உக்ரைன் நாட்டை குறிவைத்து 298 ட்ரோன்கள், 69 ஏவு கணைகள் என மொத்தம் 367 ஆயுதங்கள் மூலம் மிகப்பெரும் வான்வழித் தாக்குதலை ரஷ்யா நடத்தியதாக உக்ரைன் விமானப் படை செய்தித் தொடர்பாளர் யூரி இஹ்னாத் தெரிவித்தார்.

இந்நிலையில் இது குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ட்ரம்ப் "புடினின் செயற்பாடுகள் கவலை அளிக்கின்றன எனவும், புடினுக்கும் தனக்கும் நல்ல உறவு காணப்பட்டது எனவும், ஆனால் அவருக்கு தற்போது ஏதோ நடந்துள்ளது எனவும் அவர் முற்றிலும் பைத் தியமாகிவிட்டார் எனவும்" விமர்சித்துள்ளார்.

அத்துடன் புடின் தேவை யில்லாமல் பலரைக் கொன்று வருகின்றார் எனவும், எந்தக் காரணமும் இல்லாமல் உக்ரைனில் உள்ள பல பகுதிகள் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன எனவும் ட்ரம்ப் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேசமயம் "உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியையும் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் கருத்துத் தெரிவிக்கையில் ஜெலன்ஸ்கியின் பேச்சு அவருடைய நாட்டுக்கு நன்மை செய்யவில்லை எனவும், அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் பிரச்சினையை ஏற்படுத்துகின்றது எனவும், இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் இவ்வாறு பேசுவதை நிறுத்த வேண்டும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (நி-8)

## சீனாவுடன் இணைந்து அணு ஆயுதங்களை மேம்படுத்தும் பாகிஸ்தான்

### அமெரிக்கா பரபரப்பு அறிக்கை

(வோஷிங்டன்)

இந்தியா நடத்திய ஆப்ரேஷன் சிந்தூருக்குப் பிறகு, பாகிஸ்தானின் பாதுகாப்பு செயற்பாடுகள் அதிகரித் துள்ளன. அமெரிக்கப் புல னாய்வு அமைப்பு வெளி யிட்ட அறிக்கையில் இது தெரியவந்துள்ளது.


அமெரிக்க பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு (DIA), மே 25, 2025 அன்று வெளியிடப்பட்ட "2025 உலகளாவிய அச்சுறுத்தல் மதிப்பீடு" என்ற வருடாந்திர அறிக்கையில் பாகிஸ்தா னைப் பற்றிய பல முக்கி யமான விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த அறிக்கை அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் ஆயுத சேவைகள் தொடர் பான துணைக்குழுவிற்காக தயாரிக்கப்பட்டது. இது பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கைகள், பயங் கரவாதம் மற்றும் அணு ஆயுதங்கள் குறித்து விரி வாக விவாதிக்கிறது.

அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் இராணுவத்தின் முதன் மையான முன்னுரிமைகள் அண்டை நாடுகளுடனான எல்லை மோதல்கள், தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் மற்றும் பலூச் தேசியவாத போராளிகளின் அதிகரித்து வரும் தாக் குதல்கள், பயங்கரவாதத் திற்கு எதிரான போராட்டம் மற்றும் அணு ஆயுதங் களை நவீனமயமாக்குதல் ஆகியவை ஆகும்.

கடந்த ஒரு வருடமாக, பாகிஸ்தான் பலூச் கிளர்ச் சியாளர்களுக்கு எதிராக தினமும் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் நிலைமை மேம்படுவதற் குப் பதிலாக மோசமாகிக் கொண்டே வருகிறது.

பாகிஸ்தான் தனது இருப் புக்கு மிகப்பெரிய அச்சுறுத் தலாக இந்தியாவைக் கருது வதாக அறிக்கை கூறுகிறது. இந்தியாவின் இராணுவ சக்தியை எதிர்கொள்ள, பாகிஸ்தான் தனது இரா ணுவத்தை நவீனமயமாக்கி வருகிறது, மேலும் போர்க் களத்தில் பயன்படுத்த அணு ஆயுதங்களை உருவாக் குவதும் இதில் அடங்கும்.




பாகிஸ்தான் தனது அணு ஆயுதங்களைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருவதுடன், அதன் அணுசக்திப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் கட்டளை அமைப் பையும் மேம்படுத்தி வரு கிறது.

இதற்காக, வெளிநாட்டு சப்ளையர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து அதிக அளவிலான பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான பொருட்களை வாங்குகிறது.

இந்தப் பொருள் பெரும் பாலும் சீனாவிலிருந்து வந்து ஹாங்காங், சிங்கப்பூர், துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வழியாக பாகிஸ்தானை அடைகி றது.

பாகிஸ்தானுக்கும் சீனா வுக்கும் இடையிலான இரா ணுவ உறவுகள் அதிகரித்து வருவதாக அறிக்கை கூறி யுள்ளது.

இரு நாடுகளும் ஒவ் வொரு ஆண்டும் பல கூட்டு இராணுவப் பயிற்சிகளை நடத்துகின்றன. இரு நாடு களும் நவம்பர் 2024 இல் ஒரு புதிய விமானப் பயிற்சியையும் நடத்தின.

பிராந்திய மட்டத்தில் தனது நிலையை வலுப் படுத்த பாகிஸ்தான் தொடர்ந்து அணுசக்தியை அதி கரிக்க முயற்சிப்பதாக அறிக்கை கூறியுள்ளது.

ஆனால் பயங்கரவாதம் மற்றும் எல்லைப் பதற்றங் கள் காரணமாக, அதன் உள் மற்றும் வெளிப்புற பாதுகாப்பு இரண்டும் ஆபத் தில் உள்ளன. இந்த நிலைமை பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, முழு பிராந் தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகிறது. (நி-8)

## மய… உயி…

## (மொஸ்கோ… உக்ரைனி… இருந்து ரஷ்… நூலிழையில் … சர்வதேச … வெளியிட்டுள்…

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே போர் தொடர்ந்து வருகின்ற நிலையில் அண் மையிலும் தொடர் தாக்குல் நடத்தப்பட்டது.

கிட்டத்தட்ட 266 ட்ரோன்கள் மற்றும் 45 ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி உக்ரைன், ரஷ்யாவை நிலை குலைய வைத்தது.

இந்நிலையில், உக்ரைனின் ட்ரோன் தாக்குதலில் இருந்து ரஷ்ய ஜனாதிபதி புடின் உயிர் தப்பிய விவரம் தற்போது வெளியாகியுள்ளது.

## பாகிஸ்தானில்… வெள்ளத்தில் சிக்…

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகா ணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் அங்கு இடி, மின்னலுடன் கனமழை பெய்து வெளுத்து வாங்கியது.

பலத்த சூறாவளி காற்றுடன் பெய்த கனமழையால் தாழ் வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அங் குள்ள லாகூர், ஷேகுபுரா, நங் கனா சாஹிப், அட்டாக், முல் தான், ராஜன்பூர், ஹபிசாபாத், மியான் வாலி, ஜாங் குஜ்ரன் வாலா, லாயா உள்ளிட்ட நகரங் களில் கனமழை காரணமாக சாலைகளில் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியது.

இதனால் வாகனங்கள் சாலைகளில் ஊர்ந்து செல்லும் நிலை…

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யிரிழையில்
# யிர் தப்பினார் புடின்!

ஸ்கோ)

னின் ட்ரோன் தாக்குதலில் ரஷ்ய ஜனாதிபதி புடின் யில் உயிர் தப்பியுள்ளதாக ஊடகங்கள் செய்தி டுள்ளன.


இந்த சம்பவம் மே 20 ஆம் திகதி நடந்ததாக சர்வதேச ஊடக தக வல்கள் தெரிவிக்கின்றன.

குர்ஸ்க் பகுதிக்கு புடின் ஹெலிகாப்டரில் சென்று கொண்டு இருந்தபோது, அதன் பாதையை நோக்கி ட்ரோன் ஒன்று வருவது கண்டறியப்பட்டுள்ளது.

அதனை இடைமறித்து ரஷ்ய வான் பாதுகாப்புப் படை அழித்த நிலையில், ஹெலிகொப்டரில் இருந்த புடின் உயிர் தப்பி னார் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

குர்ஸ்க் வான்வெளியில் உக்ரைன் ட்ரோன்கள் எவ்வாறு அத்துமீறி நுழைந்தது என்பது குறித்து விசா ரணை நடத்தப்பட்டு வரு வதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

ட்ரோன் தாக்குதலின் போது ஹெலிகாப்டரில் புடின் இருந்த நிலையில், இது குறித்து உக்ரைன் அரசோ, அந்நாட்டு இராணுவமோ எவ்வித விளக்கமும் வெளி யிடவில்லை என தெரிவிக் கப்படுகின்றமை குறிப்பிடத் தககது. (நி-8)



## னில் கனமழை
## சிக்கி 20 பேர் பலி

நிலை ஏற்பட்டது.

சூறைக்காற்று காரணமாக வீட்டின் மேற் கூரைகள், மின்சாரக் கம்பங்கள், மரங்கள் ஆகியவை வேரோடு சாய்ந்து தூக்கி வீசப்பட்டன. இதனால் அங்கு மின்சார விநியோகம் தடைபட்டது. மோசமான வானிலையால் விமான போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டது. இதனால் 100இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்தாகின.

இந்நிலையில், பாகிஸ்தானில் நேற்று முன்தினம் கொட்டித் தீர்த்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, ராட்சத விளம்பரப் பலகைகள் விழுந்தது உள்ளிட்டவற்றால் பெண் கள், சிறுமிகள் உட் பட 20 பேர் உயிரி ழுந்தனர். 150இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். சுமார் 2,000 பேர் வீடுகளில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-8)

## சால்மன் மீன் வளர்ப்புக் கப்பல்
## அறிமுகப்படுத்தும் சீனா

(பீஜிங்)

உலகிலேயே முதன் முறையாக, கடலில் சால் மன் மீன்களை வளர்க் கக்கூடிய மாபெரும் வளர்ப் புக் கப்பலை உருவாக்கி சீனா புதிய சாதனை ஒன் றைப் பதிவு செய்துள்ளது.

பாரம்பரிய நில அடிப் படையிலான மீன் பண்ணை முறைகளை விட்டு விலகி, கடலின் நடுப் பகுதியில் மீன் வளர்ப்பை முன்னெடுக்கும் சீனாவின் இந்தப் புதிய முயற்சி, உலக நாடுகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

இக் கப்பல் நவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டு, சுத்தமான மற்றும் கட்டுப் படுத்தக்கூடிய சூழலில் சால் மன் மீன்களை வளர்க்கும் திறன் பெற்றதாகும்.

அத்துடன் இயற்கை மாசுபாடுகள் மற்றும் நோய்கள் போன்றவற்றைக்



கட்டுப்படுத்தி, உயர்தர மீன் உற்பத்தியை உறுதி செய் யும் வகையில் இது வடி வமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சுற்றுச்சூழல் நலம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய இரண் டையும் முன்னிலைப் படுத்தும் வகையில் இந்தத் திட்டம் அமையப்பட்டுள் ளது. நிலப்பரப்பை உப யோகப்படுத்தாமலேயே கடல் வளங்களை முழுமை யாகப் பயன்படுத்தும் இந்த முயற்சி, மீன்பிடித் துறை யில் ஒரு புதிய தொழில்நுட்ப யுக்தி என்றே பார்க்கப் படுகிறது.

இந்த முயற்சியில் கடலின் நடுப்பகுதியில் அதிக ளவில் சால்மன் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட முடியும் எனவும், சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பும் குறையும் எனவும் நிபு ணர்கள் தெரிவிக்கின்றனர். உணவுப் பாதுகாப்பையும் இது மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இக் கப்பல் சோதனைக் கட்டத்தில் உள் ளது எனவும், விரைவில் இது முழுமையாகச் செயற் பாட்டிற்கு வரும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

மீன்வளத் துறையில் தொழில்நுட்ப முன்னேற் றத்தை முன்வைக்கும் சீனாவின் இப் புதிய முயற்சி உலகளாவிய மீன்பிடி மற்றும் அக்வாடெக் துறை யில் பாரிய புரட்சியை ஏற்ப டுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளைப் பராமரிக்க 2,000 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

நாட்டின் சிறைச்சாலைகளில் கைதிகளைப் பராமரிப்பதற்காக ஆண்டு தோறும் சுமார் 20 பில்லியன் ரூபா (2,000 கோடி ரூபாய்) செலவிடப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் சுமார் 7 பில்லியன் ரூபா கைதிகளுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவதற்காக செலவிடப்படுவதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

திணைக்களத்திற்குச் சொந்தமான சிறைச்சாலைகளில் சுமார் 11,000 கைதிகளை அடைக்க முடியும் என்றும், தற்போது சுமார் 30,110 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இவர்களில் சுமார் 21,448இற்கும் அதிகமானோர் விசாரணைக் கைதிகளாக உள்ளனர்.

இந்நிலையில், தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் எண்ணிக்கை 8,662 ஆகவுள்ளது. வெலிக்கடை சிறைச்சாலையில் சுமார் 1,500 கைதிகளை வைத்திருக்க முடியும்.

எனினும், தற்போது சுமார் 3,500 கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக் காட்டுகிறது.

போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளதாகவும், வழக்கு மற்றும் தடயவியல் அறிக்கைகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் தடுப்புக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>10இல் சூரி செவ்<br>கி.பா: 32 உயரம்: 6"<br>தகைமை/தொழில்: Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer,வைத்தியர்<br>தொ.இ: B/15522 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>1 இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: FineArts, DO<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு,விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15521 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>7 இல் செவ்<br>தகைமை/தொழில்: BSc, Civil Engineer (London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்<br>தொ.இ: B/15526 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம: சித்திரை<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, Auditor (German)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (German)<br>தொ.இ: G/15523 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>7 இல் செவ்<br>கி.பா: 71 3/4 உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:BA, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15527 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா : 22 ½<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: சுவிஸ்<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்(சுவிஸ்)<br>தொ.இ: G/15524 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 23 உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: Dip in Opthalmic, கண்பரிசோதகர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15528 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>8 இல் சூரி செவ்<br>கி.பா: 72<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில் : Pharmacy Course (following)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15525 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி:பா: 0 உயரம்:5'6"<br>தகைமை/ தொழில்: A/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண் (வெளிநாடு)<br>தொ.இ: B/15529 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>1 இல்செவ் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBA, Lecturer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15530 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 380

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# சாப்பிட மறுக்கும் குழந்தைகள்!

அம்மாக்களுக்கு அடிக்கடி ஏற்படும் கவலை ஒன்று உண்டு. அதாவது குழந்தை சரியாகச் சாப்பிடமாட்டேன் என்கிறது என்ற கவலை!

இவர்கள் எல்லாம் ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். குழந்தைகள் பெரியவர்கள் போல இல்லை அவர்கள் கடிகாரத்திலே மணியைப் பார்த்து விட்டு சாப்பிட உட்காரும் ரகம் இல்லை. பசித்தால் சாப்பிடுவார்கள். இல்லை என்றால் விளையாடுவார்கள் அல்லது தூங்குவார்கள்.

அது புரியாமல் அவர்களை கட்டாயப்படுத்தி அல்லது மிரட்டி சாப்பிட வைப்பது மிகவும் தவறு.

ஒரு எட்டு மாதக் குழந்தைக்கு மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை பசிக்கும். அந்த நேரம் பார்த்து சாப்பாடு கொடுத்தால் அடம் பிடிக்காமல் சாப்பிட்டு விடும்.

அதே குழந்தைக்கு ஒரு வயது ஆகும் போது நான்கு மணிநேரத்திற்கு ஒரு தடவை பசிக்கும். இந்த வயதிலே இயற்கையாகவே பசி குறைந்திருக்கும். அது புரியாமல். "என் குழந்தை முன்பு மாதிரி சரியாக சாப்பிட மாட்டேன் என்கிறது" என்று சில பேர் டாக்டரிடம் சென்று சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

இன்னொரு விடயம். ஒரு குழந்தைக்கு வயசு அதிகமாகும் வேகத்திற்கு உடல் எடையும் அதிகமாக்கிக்கொண்டே போகாது. உடல் எடை அதிகமாகும் வேகம் குறைந்து கொண்டே வரும். ஆறு மாத குழந்தைக்கு ஒரு வாரத்திலே 150கிராம் எடை கூடும்.

ஒரு வயதிலே வாரத்திற்கு 71 கிராம் எடை கூடும். இது புரியாமல் அதிகமாக சாப்பாட்டைக் கொடுத்து குழந்தையை கஷ்டப்படுத்தக்கூடாது. ஏன்னென்றால் அளவுக்கு மீறிய உணவு அஜீரணத்தை உண்டு பண்ணி விடும்.

குழந்தைக்கு ஒரு தட்டிலே கொஞ்சமாக ஆகாரத்தை வைத்துக் கொண்டு போய் கொடுக்க வேண்டும். மலை மாதிரி குமித்து வைத்தால் அதைப் பார்த்ததுமே பசி அடங்கிப் போய்விடும்.

அடித்து மிரட்டி பயமுறுத்தி குழந்தையைச் சாப்பிட வைக்கும்பழக்கம் இருக்கிறத பாருங்கள். அதற்கு Food Forcing என்று பெயர். இப்படி செய்தால் குழந்தைக்கு சாப்பாட்டிலே விருப்பம் குறைந்துவிடும் .அதைக் கண்டாலே வெறுக்க ஆரம்பித்துவிடும். .

உளம் சார்ந்த பசிக்குறைவு Psychogenic Anorexia ஏற்பட்டு விடும். சாப்பிடுவதே ஒரு தண்டனை மாதிரி தோன்றும்.

குழந்தைகளுக்கு பிடித்த மாதிரியான ஆகாரத்தைக் கொடுக்க வேண்டும். சத்து அதிகம் இருப்பதற்காக அதுக்குப் பிடிக்காத ஆகாரத்தைக் கொடுத்துக் கட்டாயப் படுத்தக் கூடாது.

குழந்தைகளுக்கு இரண்டு வயது ஆகும் போது இயற்கையாகவே எதிர்மறை குணம் உண்டாகும். (Negativistic Behaviour) இதுமாதிரி சமயங்களிலே நாம் என்ன சொல்கின்றோமோ அதுற்க்கு நேர்மாறாக நடந்துக்கும் ஏட்டிக்குப் போட்டி, சாப்பிடச் சொன்னால் விளையாடப் போகும், விளையாடச் சொன்னால் சாப்பாடு கேட்கும் இதைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டும். குழந்தை சொன்ன பேச்சைக் கேட்கவில்லை என்று கோபப்படக்கூடாது.

குழந்தை வளர வளர பிடிவாத குணம் வருவது சகஜம். கேட்டதை வாங்கிக் கொடுத்தாத்தான் சாப்பிடுவேன் என்று பிடிவாதம் செய்யும் வாங்கிக் கொடுப்பது தான் உத்தமம் நீங்களும் அதனிடம் பிடிவாதம் செய்துகொண்டிருக்கக்கூடாது. "கேட்டது கிடைக்கவில்லையே" என்ற ஏமாற்றம் கூட குழந்தையின் பசியைக் குறைத்துவிடும். கேட்டது கிடைத்துவிட்டால் பசி அதிகமாகும். கொடுத்ததை மளமள என்று சாப்பிட்டு விடும்.

குழந்தைகளுக்குக் கண்ட கண்ட நேரத்திலே சாப்பிட எதையாவது வாங்கிக் கொடுத்துக்கொண்டிருந்தால் சாப்பாட்டு நேரத்திலே சாப்பிடாமல் அடம் பிடிக்கும்.

பாடசாலை போகின்ற பிள்ளைகள் காலை உணவை சரியாக சாப்பிடமாட்டார்கள்அச்சம், அவசரம், பரபரப்பு இவைகள்தான் காரணம். பாடசாலைக்குப் புறப்படுவதற்கு ஒரு முக்கால் மணி நேரத்திற்கு முன்னாடியே சாப்பாடு போட்டு விடுங்கள். அது சரியாக போயிவிடும்.

படிக்கிற குழந்தைகள் உடல் சோர்வு, உளச்சோர்வு இது காரணமாவும் சாப்பிட மறுப்பது உண்டு. இப்போது உதாரணமாக மாலை விளையாடிவிட்டு வீட்டுக்கு வந்ததும் சாப்பிடச் சொன்னால்"வேண்டாம்" என்பார்கள். இது உடல்சோர்வு.

ரொம்பநேரம் வீட்டுப்பாடங்களை செய்து முடித்த கையோடு சாப்பிடச் சொன்னாலும் அவர்களாலே சரியாகச் சாப்பிட முடியாது. இது உளச்சோர்வு.இதைத்தவிர குழந்தைகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டாலும் சாப்பிட மறுப்பது உண்டு.

சில மருந்து மாத்திரைகளும் பசியைக் குறைத்துவிடும். அதனாலே சரியாக தெரிந்துகொண்டு குழந்தைகளைச் சாப்பிட வைக்க வேண்டும். அது புரியாமல். கையில் சாப்பாட்டு தட்டை வைத்துக் கொண்டு குழந்தைகளை விரட்டிக் கொண்டு அலையக்கூடாது.

ஒரு சின்னப் பையன் சொன்னான்: "என் அம்மா சாப்பாடு போடுவது தெரிந்தால் நான் உடனே வீட்டை விட்டு வெளியிலே ஓடிப் போய்விடுவேன்!" என்றான்.

"ஏன் அப்படி செய்கிறாய்?" என்று கேட்டேன்! "எங்கள் அப்பா கூட அப்படித்தான் சார் செய்வார்!" அப்படி என்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால்
## சிறுபோக நெற்செய்கையில் பாதிப்பு
### கிளி.விவசாயப் பணிப்பாளர்

(கண்டாவளை)

**சீரற்ற காலநிலை காரணமாக சிறுபோக நெற்செய்கையில் மடிச்சுக்கட்டி, அறக்கொட்டியான், சிற்றுண்ணிகள் போன்றவற்றின் தாக்கங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.**

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிறுபோக நெற்செய்கையில் ஏற்படக்கூடிய நோய் தாக்கங்கள் தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்பூட்டும் வகையில் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தலைமையில் ஊடக சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை இரணைமடுக்குளம் உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் சிறிய நீர் பாசனக் குளங்கள் ஆகியவற்றின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக குறித்த பயிர்ச் செய்கைகளில் பல்வேறு நோய் தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன

குறிப்பாக மடிச்சுக்கட்டி அறக்கொட்டியான் சிற்றுண்ணி தாக்கம் என்பன அவதானிக்கப்பட்டுள்ளன.

இதனால் எதிர்காலத்தில் விளைச்சல்கள் பாதிக்கப்படலாம் என்ற அடிப்படையில் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறித்த ஊடக சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றது. (8-315)


## மாட்டு இறைச்சியுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் சட்டவிரோத மாட்டு இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, அனுமதி இன்றி ஒரு தொகை மாட்டு இறைச்சியை முச்சக்கர வண்டியில் மருதங் கேணி புதுக்காட்டு வீதியூடாக செம்பியன் பற்று பகுதிக்கு கொண்டு செல்ல முயற்சித்த வேளையில் மருதங்கேணி பொலிஸாரால் மருதங்கேணி பொதுச் சந்தை முன்பாக அண்மையில் காலை 10 மணியளவில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(8-316)



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (படம்-சதீஸ்)

## கிளிநொச்சி மாவட்டத்தில் தீயணைப்பு ஒத்திகை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தீயணைப்பு பயிற்சி தொடர்பான ஒத்திகை மாவட்ட செயலக வளாகத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வினை மாவட்ட செயலக உற்பத்தித் திறன் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கட்டடத் தொகுதியில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு கருவிகளினை அனர்த்த காலங்களில் உடனடியாக களத்தில் எல்லோரும் பயன்படுத்துதல் மற்றும் குறித்த கருவிகளின் பயன்பாடுகள் தொடர்பாக செயன்முறைரீதியாக விழிப்புணர்வூட்டும் நோக்கில் இது நடைபெற்றது.

இதன்போது தீ விபத்து ஏற்பட்டால் எப்படி தடுப்பது, விபத்து ஏற்பட்டால் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள், தீயணைப்பு கருவிகளின் பயன்பாடுகள் மற்றும் கையாளுகை தொடர்பாக தெளிவூட்டல் பற்றி மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பிரிவின் உதவிப் பணிப்பாளர் சி.கோகுலராஜா ஒத்திகையின் மூலம் விளக்கினார்.

தொடர்ந்து தீயணைப்பு கொள்கலன்களை கையாளுகின்ற முறைமை தொடர்பாக செயன்முறை ரீதியாக விளக்கமளிக்கப்பட்டன.

இச் செயலமர்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) இ.நளாஜினி, பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள், உற்பத்தித்திறன் பிரிவின் உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-316)


## பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமானது
### வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் உற்சவம்



(முல்லைத்தீவு)

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் நேற்றைய தினம் பாக்குத்தெண்டல் நிகழ்வுடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 02.06.2025 திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கான தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் எதிர்வரும் 09.06.2025 திங்கட்கிழமை வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வான வைகாசி விசாகப் பொங்கல் உற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)



553 ஆவது இராணுவ படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 9 பாடசாலை மாணவர்களுக்கான இரண்டு நாள் உதைபந்து பயிற்சி முகாம் முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன. (படம்: தேவானந்தன்)

## இலங்கை ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது நேற்று சற்று குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது நேற்று முறையே 295.24 ரூபாவாகவும், 303.70 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுதியானது 295.18 ரூபாவாகவும், 303.58 ரூபாவாகவும் காணப்பட்டது. (நி-8)

## மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு - வாகரை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிச்சங்கேணி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான மார்க்கத்தின் பனிச்சங்கேணி பகுதியில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் அதில் பயணித்த மற்றைய நபர் ஆகிய இருவரும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 783





எதற்காக? இராச்சியம் ஆளும் பேரரசர்கள் தங்களை மணந்து கொள்ளக் காத்திருப்பதால் தங்களை நான் மறந்து விட வேண்டும் என்று வற்புறுத்தினான்.

நீரும் அடியோடு என்னை மறந்து விட்டீராக்கும்!" என்னால் அடியோடு மறக்க முடியவில்லை ஆனால் அது முதலாவது தங்களை என் அருமைச் சகோதரியாகக் கருதத் தொடங்கினேன். இளவரசி! உடனே கந்தமாறனிடம் என்னை அழைத்துப் போங்கள்! அல்லது அவனை இங்கே அழையுங்கள்.

ஏன் இத்தகைய பெரும் பொய்யை அவன் சொன்னான் என்றாவது தெரிந்து கொள்கிறேன், அல்லது உண்மையிலேயே அவன் அப்படி எண்ணிக் கொண்டிருந்தால், அந்தத் தப்பான எண்ணத்தைப் போக்குகிறேன்."

"தஞ்சாவூரில் ஆரம்பித்த காரியத்தை இங்கே பூர்த்தி செய்து விடலாம் என்று வந்தீராக்கும்".

அப்படி என்றால்? அங்கே அவனைக் கொல்ல முயன்றீர் அந்த முயற்சி பலிக்கவில்லை.

கடவுளே! கந்தமாறனைக் கொல்லுவதற்கு அவனுடைய அரண்மனையைத் தேடியா வருவேன்.இரகசிய வழியாக வந்தது வேறு எதற்காக?"அதோ, உற்றுக் கேளுங்கள்! என்னைக் கொல்ல வந்தவர்கள் அடுத்த அறையில் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் நடமாடும் சத்தமும் பேசும் குரல்களும் கேட்கவில்லையா?" அவர்கள் எதற்காக உம்மைக் கொல்ல வரவேண்டும்?"

அவர்களைப் பார்த்தால் மந்திரவாதிகள் போலிருக்கிறது. ஒருவேளை நரபலி கொடுக்கும் கூட்டமாயிருக்கலாம்.

சகல இலட்சணங்களும் பொருந்திய இராஜகுமாரனாகிய உம்மை அதற்காகப் பிடித்தார்கள் போலிருக்கிறது என்று கூறி மணிமேகலை சிரித்தாள்.

"அதுதான் எனக்கும் அதிசயமாயிருக்கிறது. இந்த ஆந்தை விழி விழிக்கும் குரங்கு மூஞ்சிக்காரனை அவர்கள் எதற்காகப் பிடிக்க வந்தார்கள் என்று தெரியவில்லை. உங்கள் பேச்சைக் கேட்ட பிறகு ஒரு சந்தேகம் உதிக்கிறது. ஒருவேளை என் நண்பன் கந்தமாறனே இப்படிப் பட்ட ஏற்பாடு செய்திருப்பானோ என்று. அவனிடம் உடனே என்னை அழைத்துச் செல்லுங்கள்! ஒன்று அவனுடைய தப்பு அபிப்பிராயத்தைப் போக்கிக் கொள்ளட்டும். இல்லாவிட்டால் என்னை அவன் கையினாலேயே கொன்று விடட்டும். கொலைக்காரர்களை எதற்காக ஏவ வேண்டும்? அம்மணி! உடனே கந்தமாறனை அழைத்து விடுங்கள்!

"ஐயா! அவ்வளவு அவசரப்பட வேண்டாம் கந்தமாறன் ஊரில் இல்லை." எங்கே போயிருக்கிறான்?"


"காஞ்சிக்குக் கரிகாலரை அழைத்து வரப் போயிருக்கிறான். நாளை இரவு எல்லோரும் இங்கு வந்து விடுவார்கள் அதுவரையில் நீர்...

அதுவரையில் என்னை இங்கேயே இருக்கச் சொல்கிறீர்களா? அது நியாயமல்ல!" இங்கே இருக்கச் சொல்லவில்லை இன்னும் சற்று நேரத்தில் எல்லாம் இங்கே பழுவூர் இளைய ராணி வந்து விடுவாள். பிறகு ஈ, காக்கா கூட இங்கே வர முடியாது. பழுவேட்டரையர் எப்பேர்ப்பட்டவர் என்பது உமக்குத் தெரிந்திருக்கும். அவர் உம்மை இங்கே கண்டால் உடனே கண்டம் துண்டமாய் வெட்டிப் போட்டு விடச் செய்வார்! (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வல்லவனுக்கு வல்லவன்



(நேற்றைய தொடர்ச்சி)

அந்தக் கிளையை ஆட்டாமல் அசையாமல் மெல்ல உள்ளே நடந்து சென்று புலியார் என்ன செய்கிறார் என்று பார்த்தது.

புலியார் உற்சாகமாகத் தூங்கிக் கொண்டிருந்தார். கரடி அந்தக் கிளையைச் சத்தம் காட்டாமல் வைத்து விட்டு சற்று வெளியே வந்து அங்கிருந்த நீண்ட குச்சி ஒன்றை எடுத்து குகை வெளியிலிருந்து அந்தத் தேன் கூட்டை கலைத்து விட்டு விறு விறுவென வெளியே ஓடி, ஒரு மரத்தின் மீது ஏறிக்கொண்டு நடப்பதைக் கண்காணித்தது.

தனது கூண்டு கலைக்கப் பட்டவுடன் சீற்றத்துடன் தேனீக்கள் குபீரென கூட்டமாய் பறந்து வெளியே வந்தன. யார் தங்களது கூட்டைக் கலைத்தது? என்று கோபத்துடன் பார்த்தன.

எதிரில் புலியார் சுகமாய் உறங்குவது கண்களுக்குத் தெரிந்தது. அவ்வளவுதான் அனைத்து தேனீக்களும் பறந்து சென்று புலியாரைக் கொட்டித் தீர்த்து விட்டன.

சுகமாய் படுத்து உறங்கிக் கொண்டிருந்த புலியார் அத்தனை தேனீக்களின் கொட்டுக்களை தாங்க முடியாமல் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தது. மூக்கினுள்ளும், வாயினுள்ளும் புகுந்து கொண்ட தேனீக்கள் அங்கும் விடாமல் கொட்டின.

வலி தாங்காமல் கதறிக் கொண்டே ஓடிய புலியார் தலை தெறிக்க அந்தக் காட்டை விட்டே ஓடியது.

இத்தனையும் சற்று தூரத்தில் மரத்தின் மீது அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கரடியார் நிம்மதியாய் தன்னுடைய குகைக்கு வந்தது.

ஓநாயிடம் நாளை மாலை நீ மீண்டும் உன் குகைக்கு போய்க் கொள்ளலாம், அந்தப் புலியார் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார். ஏன் இந்தக் காட்டை விட்டே ஓடிவிட்டார்.

இனி யாரும் பயப்படத் தேவையில்லை. இன்று மட்டும் நீயும் உன் குட்டிகளும் இங்கு தங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு தன்னுடைய குட்டிகளை அழைத்துக் கொண்டு அந்த குகையில் சற்று தூரம் சென்று அங்கு தங்கிக் கொண்டது.

மறு நாள் மாலை ஓநாய் தன்னுடைய குட்டிகளுடன் தன்னுடைய குகைக்கு சென்று பார்த்து நிம்மதியுடன் அங்கு தங்கியது.

அதற்கு மறு நாள் காலை மறக்காமல் கரடியாரிடம் சென்று தன் நன்றியை தெரிவித்தது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே சில திறமைகளும் வெளிப்படுகின்றன.

– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் தமிழர்கள் சாவதில் உங்களுக்குக் கவலை இல்லையே

எம் தமிழ் அரசியல் தரப்பை நினைத்தால் கன்னத்தின் ஓரங்கள் நனைவதைத் தவிர வேறெதுவும் இல்லை.

இப்படியொரு அரசியல் தரப்புகள் எங்கள் இனத்துக்கு கிடைத்ததென்றால், அது நம் தமிழினம் செய்த ஊழ்வினையன்றி வேறி ல்லை.

இதை நாம் கூறும்போது எம் மீது தமிழ் அரசியல் தரப்பினர் ஆத்திரம் கொள்வர். ஆனால் அதற்காக உண்மையைக் கூறாமல் விடமுடியுமா என்ன?

ஆம், தமிழினம் வாழ வேண்டும் என்பதற் காகத் தங்கள் உடலில் குண்டைச் சுமந்து சென்ற எம் இளைஞர்களை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

ஒருவரா, இருவரா பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் களமாடினர்.

அவர்களின் களப் போர் அவர்களுக்கான தன்று. அது தமிழ் இனத்திற்கானது – தமிழ் மக்களுக்கானது.

இவ்வாறு ஒரு தலைவனின் வழியில் தங் களின் இன்னுயிரைத் தந்த தியாகிகள் வாழ்ந்த மண்ணில் தானே நம் தமிழ் அரசியல் தரப்பி னரும் வாழ்ந்தனர் – வாழ்கின்றனர் எனும் போது, தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்களை நினைத்தால் வேதனை இதயத்தை அடைத்துக் கொள்ளும்.

ஓ! கடவுளே இப்படியொரு அரசியல் தரப்பு இருக்கும்போதா இந்த இளைஞர்கள் எல் லோரையும் நம்பி, தமிழ் வாழும் என்று எண்ணி தங்களை ஈகை செய்தனர்.

ஓ! எங்கள் அரசியல் தரப்புகளுக்கு பிரச்சி னைகள் மட்டுமே தேவை. ஆனாலும் அந்தப் பிரச்சினைகள் விபத்து மரணங்களாக, தற் கொலைகளாக, போதைப் பாவனையாக, கொலை கொள்ளையாக இருந்தால் அவை இம்மியும் அவர்களுக்குப் பிரச்சினை இல்லை.

ஆம், நம் அரசியல்வாதிகளுக்கு அவர் களின் அரசியல் பிழைப்புக்கான பிரச்சினை களே தேவை.

மற்றும்படி விபத்துக்களால் எத்தனை ஆயிரம் தமிழ் உயிர்கள் இழந்து போனாலும் வாழ முடியாமல் மனவிரக்தியில் எத்தனை தமிழ் இளைஞர் யுவதிகள் தற்கொலை செய்து கொண்டாலும் கொடிய போதைவஸ்துக்கு எங்கள் ஒட்டுமொத்த தமிழ் இளம் சந்ததி பலியாகிப் போனாலும் அதுபற்றி நம் அரசியல் தரப்புகள் வாய்திறக்கவேமாட்டா.

அவர்களுக்கெல்லாம் பிரச்சினை என்பது இனவாதப் பிரச்சினையாக மட்டுமே இருக்க வேண்டும்.

மாறாக, தமிழினம் சாவதைப் பற்றி – அழிவதைப் பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலையும் இல்லை. அதுவொரு பிரச்சி னையும் இல்லை.

இதை அவர்கள் மறுப்பார்களாயின்; நாள் தோறும் எங்கள் மண்ணில் விபத்தால் – தற் கொலையால் ஏற்படுகின்ற உயிரிழப்புகளைத் தடுக்க அவர்கள் ஏதேனும் செய்தார்களா? அதற்கான வழிவகைகளைக் கூடி ஆராய்ந் தார்களா?

ஆக, உங்களுக்கு உங்கள் அரசியல் சீவி யத்துக்கு தீனியிடுகின்ற உயிரிழப்புகள் மட்டுமே உயிரிழப்பு.

மற்றும்படி நம்மவர்கள் சாவதில் உங்க ளுக்கு கொன்றும் கவலையும் இல்லை. இடை யூறும் இல்லையே.

# ஜனாதிபதி அநுரவின் நினைப்பு ஜூன் 2 தவிடு பொடியாகும்

## நிரோஷன் பாதுக்க உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்றதிகாரத் துக்கு சவால் விடுக்கும் வகையிலேயே முன் னாள் ஜனாதிபதி ரண சிங்க பிரேமதாஸ உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தை உரு வாக்கினார். நிறைவேற் றதிகாரம் இல்லாவிட் டாலும் கிராமத்துக்கு அதிகாரம் காணப்பட வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். எனவே சட்டத்தை மீறி ஜனாதிபதியால் செயற் பட முடியாது என ஐக் கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக் கிய மக்கள் சக்தி தலை மையகத்தில் நேற்று திங் கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் இதனைத் தெரிவி த்த அவர் மேலும் குறிப் பிடுகையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை இன் றியே வெற்றி பெற்றார். அதேபோன்று பெரும் பான்மை இன்றி உள் ளூராட்சிமன்றங்களி லும் ஆட்சியமைக்க முடியும் என்று எண்ணு கின்றார். அது தவறா கும். அதனைப் புரிந்து கொள்வதற்கு அவர் ஜூன் 2 ஆம் திகதி வரை காத்திருக்க வேண்டும். 2 ஆம் திகதி வாக்கெடுப் பின் பின்னரே ஜனாதி பதி அநுரகுமார முன் னிலையிலிருக்கின் றாரா அல்லது பின்தள் ளப்பட்டுள்ளாரா என்பது தெரியவரும்.

உள்ளூராட்சிமன்றங் களின் வருமானம் ஜனா திபதி அநுரவிடமிருந்து கிடைப்பதில்லை. இங்கு கிடைக்கப் பெறும் நேரடி வருமானத் தைக் கொண்டு நிர்வா கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். எனவே அரசாங்கம் நிதி ஒதுக் கும் வரை காத்திருக்க வேண்டிய தேவை ஏற் படாது.

நிறைவேற்றதிகாரத் துக்கு சவால் விடுக்கும் வகையிலேயே முன் னாள் ஜனாதிபதி ரண சிங்க பிரேமதாஸ இந்த தேர்தல் சட்டத்தை உருவாக்கினார். நிறை வேற்றதிகாரம் இல்லா விட்டாலும் கிராமத்துக்கு அதிகாரம் காணப்பட வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். எனவே உள்ளூராட்சி மன்றங்களையும் பெல வத்த அலுவலகத்தில் கட்டுப்பாட்டில் எடுக்க நினைத்தால் அதற்கு எதிர்க்கட்சிகள் ஒருபோ தும் இடமளிக்கப் போவ தில்லை. இயலாமையு டையவர்களின் இறுதி ஆயுதம் அச்சுறுத்தலாக இருக்கலாம். ஆனால் அதனைக் கொண்டு ஜனநாயகத்தை அழிக்க முடியாது. கட்சித் தலை மையகத்தினால் எடுக் கப்பட்ட தீர்மானத்துக் கமைய நாம் செயற்படு வோம். மக்களால், எதிர் க்கட்சிகளுக்கு அதிகார மளிக்கப்பட்டுள்ள உள் ளூராட்சிமன்றங்களில் நாம் ஆட்சியமைத்து மக் களுக்கான சேவை யாற்றுவோம் என்றார். (ந-4,7)

### பனை அபிவிருத்திச் சபை

## பணிப்பாளர் சபை உறுப்பினர் பேராசிரியர் ஐங்கரன் இராஜினாமா

(கொழும்பு)

பனை அபிவிருத்திச் சபை யின் பணிப்பாளர் சபை உறுப்பினர் பேராசிரியர் பூபாலசுந்த ரம் ஐங்கரன் தனது பத வியை இராஜினாமாச் செய்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை கொழும் பில் அமைச்சர் சமந்த ஹெட்டியாராச்சி தலை மையில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பா ணத்திலுள்ள பனை அபிவிருத் திச்சபையின் தலைமைக் காரியாலயத் திற்கு என நிய மிக்கப் பட்ட நிர்வாக உத்தியோ கத்தரும், உள்ளகக் கணக்காய்வு உத்தி யோ கத்தரும் கொழும்பில் இருந்தவாறு பணியாற் றுவது தவறு எனச் சுட் டிக்காட்டிய பேராசிரியர் ஐங்கரன்; சம்பந்தப்பட்ட இருவரும் யாழ்ப்பாணத் திலுள்ள பனை அபிவி ருத்திச் சபையின் தலைமை அலுவலகத் தில் கடமையாற்ற வேண் டும் எனவும் கூறினார்.

எனினும் அவரது கோரிக்கைக்கு கொழு ம்பு அதிகாரிகள் எதிர்ப் புத் தெரிவித்தனர்.

இதேவேளை தனது நியாயபூர்வமான கோரி க்கை தொடர்பில் அமை ச்சர் கவனம் எடுக்கா தமை குறித்து தனது அதிருப்தியை வெளி யிட்ட பேராசிரியர் ஐங்க ரன், பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இருந்து வெளியேறியதுடன் தனது பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வதா கவும் அங்கு வைத்துத் தெரிவித்தார். (ந-4,7)

## 60 மாடுகளைப் பிடித்தது வவுனியா மாநகர சபை

(வவுனியா)

வவுனியா மாநகர சபை பகுதியில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கட்டாக்கா லியாக திரிந்த 60க்கு மேற்பட்ட மாடுகள் மாந கரசபையால் பிடிக்கப் பட்டுள்ளன.

கட்டாக்காலி மாடுக ளால் இடம்பெறும் விபத் துக்களை கட்டுப்படுத் தும் நோக்குடன் இரவு வேளைகளில் பொதுப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவி க்கும் கால்நடைகளைப் பிடிக்கப்படவுள்ளதாக பொது மக்களுக்கு தொட ர்ச்சியாக ஒலிபெருக்கி மூலமாக மாநகர சபை யால் அறிவுறுத்தல் வழ ங்கப்பட்டிருந்தது.

இவ்வறிவித்தலுக்கு அமைவாக இரவு வேளைகளில் பொதுப் போக்குவரத்திற்கு இடையூறாக நின்றிருந்த 60 க்கும் மேற்பட்ட கால் நடைகள் மாநகர சபை யினரால் பிடிக்கப்பட்டு நகர சபையின் பராமரிப் பில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த கால்நடை களை உரிமையாளர்கள் 10 நாட்களுக்குள் அதற் குரிய தண்டப்பணத் தினைச் செலுத்தி மீளப் பெற்றுக்கொள்ள முடி யுமென மாநகரசபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 10 நாட் களினுள் உரிமை கோர ப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய மாநகரசபை நடவடி க்கை எடுத்துள்ளது. (ந-4,7,250)

### வலிகாமம் தெற்கில்

## அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் நடவடிக்கை

(சுன்னாகம்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் எல் லைக்குட்பட்ட பகுதிக ளில் நிறுத்தல் அளக்கும் உபகரணங்களைச் சரி பார்த்தல் மற்றும் முத் திரை இடும் நடவடி க்கை இன்று செவ்வாய் க்கிழமை (27), சுன்னாக லில் அமைந்துள்ள வலிகாமம் தெற்குப் பிர தேசசபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை (28) வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன் னாகம் உப அலுவலகத் திலும் எதிர்வரும் வியா ழக்கிழமை (29) வலிகா மம் தெற்குப் பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளது.

இப் பகுதியைச் சேர் ந்த வர்த்தகர்கள் தமது நிறுத்தல் உபகரணங் களைச் சரிபார்த்து முத் திரையிட்டுக் கொள்ள முடியுமென அறிவிக் கப்பட்டுள்ளது. (ந-4,7)

## கதிரமலை சிவன் ஆலயத்தில் சிறப்புச் சொற்பொழிவு

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம் சுன் னாகம் கதிரமலைச் சிவன் கோவில் மஹோ ற்சவ விஞ்ஞாபனத்தின் பூங்காவன உற்சவ தின மான நாளை புதன்கி ழமை மாலை 4.00 மணி யளவில் திருமுருக கிரு பானந்தவாரியார் சுவாமி களின் மாணவி கலா நிதி தேசமங்கயற்கரசி அம்மையாரின் (தமிழ் நாடு) சிறப்புச் சொற் பொழிவு இடம்பெறவுள் ளது. (ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு முடிவு



(கொழும்பு)

நீதி கோருபவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ளதால், 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகளை அரசாங்க அதிகாரிகள் மதித்து அதற்கேற்ப செயற்படுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் மனித உரிமைகள் ஆணைக்குழு முதலில் உருவாக்கப்பட்டது.

மனித உரிமைகளைக் கொண்ட பண்பாடு, கலாசாரம் நாட்டில் முன்னெடுக்கப்படும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் கடந்த 25 ஆண்டுகளில் அது நடக்கவில்லை.

நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக சமூக, தொழில்நுட்ப மற்றும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இருந்த போதிலும், ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. இதை எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது. முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்படாவிட்டால், பொது மக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு செல்வதில் எந்த அர்த்தமும் இல்லை என்றே நினைப்பர்.

அத்தோடு உயர் நீதிமன்றத்திற்குச் செல்வதை விட மனித உரிமைகள் ஆணைக்குழுக்கு செல்வது எளிதாக இருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்வதன் விளைவு கேள்விக்குறியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது, பங்குதாரர்களுடன் கலந்தாலோசிப்பது மற்றும் நீதி அமைச்சகத்திற்கு இது தொடர்பான சட்டமூலத்திற்கான வரைவை வழங்க ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. தற்போதுள்ள சட்ட விதிகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது மற்றும் விசாரணைகளை வலுப்படுத்துவதும் இந்த திருத்தங்களின் நோக்கமாகும் என அவர் தெரிவித்தார். (ஙி)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ - 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com





### நிதுஷா

நல்லது நடக்குமென்று சரியாத் தான் சொல்லி இருக்கிறார்கள்...
நல்லது நடந்து தான் வருது...
கெட்டது தான் ஓடி வந்துடுது...



### மதிவதனா

மனைவிகள்
அவங்க அம்மா வீட்டுக்கு போகும் போது...



அவங்க அம்மா விட்டிலிருந்து வரும்போது...



### வகாப்தீன்

- இருக்கிறத வச்சு சந்தோசமாக இருக்கனும்
- எது 10 லட்சம் கடன்...
-15000 சம்பளத்த வச்சா



### நந்திதா

சொந்தக்காரங்க சந்தோசமாக இருக்க என்ன பண்ணனும்?



அடிக்கடி அவர்களிடம் போய் நம்ம கஷ்டத்தை சொல்லிட்டு வந்தா போதும்...

### வருண்



மே ஐ கெல்ப் யு விற்கு என்ன அர்த்தம்



மே மாதம் மட்டும் உதவி பண்ணுவாங்க என்று அர்த்தம் சேர்...

### யுலேஷ்

எவன கேட்டாலும் லவ் பண்ணிட்டு இருக்கேன்னு சொல்லுறானுக...
கல்யாண பத்திரிகை வைக்கும் போது கேட்டா அரேஞ்ச் மேரேஜ்ன்னு சொல்றானுக.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ருமான வின்ஸ்டன் பீட்டர்ஸ் நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது பொருளாதாரம், இரு நாடுகளுக்குமிடையிலான வெளியுற வுக் கொள்கை, முதலீடு, கல்வி, விவ சாயம், சுற்றுலா உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்தாலோ சிக்கப்பட்டது.

இச்சந்திப்புக்கு முன்னதாக நியூ சிலாந்தின் துணைப் பிரதமருக்கும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,4)

## ஒரே பிரசவத்தில்...

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பெண் ஒருவர் ஒரே பிரச வத்தில் ஐந்து குழந்தைகளைப் பிரச வித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யைச் சேர்ந்த தம்பதியருக்கே கடந்த சனிக்கிழமை மூன்று ஆண் குழந்தை களும் இரண்டு பெண் குழந்தைகளு மாக ஐந்து குழந்தைகள் பிறந்துள் ளன.

தாயும் குழந்தைகளும் நலமுடன் இருப்பதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி விக்கின்றன. (ந-7,4)

## யாழ்.இந்தியத்...

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்று அதிகாலைவேளை இடம் பெற்ற கார் - டிப்பர் கோர விபத்தில் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் உத்தியோகத்தர் சச்சி தானந்தக் குருக்கள் பிரபாகர சர்மா (வயது-52) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது மனைவி சீத்தாலட்சுமி (வயது-50) (யாழ்.பல்கலைக்கழக நட னத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்), அவரது மகன் பி.அக்ஷய் (வயது-27), மாமனார் சுவாமிநாத ஐயர் (வயது-70) ஆகியோர் படுகாயமடைந்த நிலை யில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதா வது,

வடமராட்சி நெல்லியடியைச் சொந்த இடமாகக் கொண்ட பிரபாகர சர்மா தனது குடும்பத்துடன் வட இந்தியாவில் தல யாத்திரை மேற்கொண்டிருந்தார்.

தலயாத்திரையை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய அவர் தனது குடும்பத்தினருடன் காரில் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துள் ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை வேளை ஓமந்தையில் ஏ9 வீதியில் அவர் செலுத்தி வந்த காரும் எதிரே வந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பிரபா கர சர்மா சம்பவ இடத்தில் உயிரிழந் ததுடன் அவருடன் பயணித்த ஏனை யவர்கள் படுகாயமடைந்தனர்.

இவ் விபத்தின்போது அவர்கள் பயணித்த கார் முழுமையாகச் சேத மடைந்தது.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய பிரபாகர சர்மா மிக நேர்மையான, ஆற்றல்மிக்க உத்தி யோகத்தராக விளங்கியதுடன் இந் தியத் துணைத் தூதரகத்தின் மூலம் யாழ்ப்பாண மக்களுக்கு ஆற்றக் கூடிய சேவைகளை முழுமையாகப் பெற்றுக் கொடுப்பதில் கடுமையாகப் பாடுபட்டவர்.

அவரின் திடீர் மறைவு குறித்து பல ரும் தமது அதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் தெரிவித்துள்ளனர். (ந-7,4)

## மோசடிக்...

ஒருவரைப் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வடமராட்சி கிழக்கு கட்டைக் காட் டைச் சேர்ந்த ரமேஷ் பிரேமா என்னும் குடும்பப் பெண்ணிடம் அவரது கண வரைக் கனடா அனுப்புவதாகக் கூறி பெண் ஒருவர் 27 இலட்சத்து 80 ஆயி ரம் ரூபாயைக் கடந்த 2023ஆம் ஆண்டு பெற்றுள்ளார்.

அதன் பின்பு அவரது தொடர்பு துண்டிக்கப்பட்டதுடன் தாம் மோசடி செய்யப்பட்டதை உணர்ந்த பிரஸ் தாபப் பெண் காசு பரிமாற்றம் செய்யப் பட்டமைக்கான அனைத்து ஆதாரங் களுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து 2024ஆம் ஆண்டு சந்தேக நபருக்கு கிளிநொச்சி நீதிமன் றம் பயணத் தடை விதித்து பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில், குறித்த சந்தேக நபர் மருதங்கேணி பொலிஸாரால் செம்பியன்பற்றில் வைத்து கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் குறித்த நபர் அதே பகுதியில் பலரிடம் மோசடி செய்தமை தெரியவந்துள்ளது. (ந-7,4)

## மகிந்தானந்த...

பிறப்பித்தது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், சீன நிறுவனமொன்றிலி ருந்து தரமற்ற உரங்களைக் கப்பலில் இறக்குமதி செய் தமை தொடர்பில் அவர் விளக்கமறி யலில் வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (ந-7,4)

## சமர்ப்...

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த கால எல்லைக்குள் செலவு அறிக் கைகளை சமர்ப் பிக்காத வேட்பா ளர்களின் விப ரங்கள் பொலி ஸாரிடம் ஒப் படைக்கப்படும்.

சட்டமா அதி பரின் ஆலோ சனையைப் பெற்று வேட் பாளர்கள் மீது வழக்குத் தொட ரப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரி வித்தார். (ந-7,4)

## இவ்...

மீண்டும் வீழ்ச்சி யடையும். அவ் வாறானதொரு நிலை ஏற்பட் டால் எதிர்க்கட்சி கள் ஒன்றிணைந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுப் போமென ஐக்கிய தேசியக் கட்சி யின் தவிசாளர் வஜிர அபேவர்த் தன தெரிவித் தார்.

காலியில்நேற்று திங்கட் கிழமை இடம்பெற்ற நிகழ் வொன்றின் பின் னர் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கையி லேயே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடு கையில்,

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச்சென்ற வழியைத் தவிர வேறு வழியில்லை. இந்த வழிக்கு மாற்றமாக பயணித்தால் நாடு வீழ்ச்சியடையும் என்பதை நாம் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டினோம்.

தற்போது அரசாங்கம் செல்லும் பயணத்தைப் பார்க்கும்போது இந்த வருட இறுதிக்குள் நாடு வீழ்ச்சியடை யும் என்றார். (ந-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.05.26
சீட்டிழுப்பு இலக்கம் 5841
A 1 1 6 0 4 3 3
அத சம்பத A 6 0 4 3
சீட்டிழுப்பு இலக்கம் 416
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1871
X 07 40 47 65 X
Double Chance 46834

மெகா பவர்
திகதி 26/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2189
J 05 05 21 50 60

ஜய
திகதி 2025.05.26
சீட்டிழுப்பு இலக்கம் 109
C 5 1 1 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4083
சீட்டிழுப்பு திகதி 26.05.2025
C 09 23 45 62
C
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.26
சீட்டிழுப்பு இலக்கம் 1150
மீனம் 11 30 48 51 மீனம்
53446 33

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
26.05.2025 வெற்றி வாரம் 549
Y 2 9 2 4 4 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,969,924.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2815
சீட்டிழுப்பு திகதி 2025.05.26 தினம் திங்கட்கிழமை
13 43 46 72 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,243,616.80
DLB

சனிதா
திகதி 26.05.2025 வெற்றி வாரம் 4976
10 27 33 54 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,003,292.00
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.05.26 வெற்றி வாரம் 2129
08 21 29 64 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,512,817.20
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4527
சீட்டிழுப்பு திகதி 26.05.2025 தினம் திங்கட்கிழமை
19 20 25 33 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,383,295.20
197107
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 11 06 28 36 47
1991
26.05.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட்
DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2641
சீட்டிழுப்பு திகதி: 2025.05.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,509,976.80
17 30 32 52 B
763557
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3055)

076 825 7716 (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

1. நல்லூர் - சுண்டிக்குழி, இந்து, 1996, ரேவதி, MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 51633
2. இளவாலை, இந்து, 1991, கேட்டை, Civil Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 47511
3. அல்வாய், இந்து, 1990, ரோகினி, Charted Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 42381
4. மானிப்பாய், இந்து, 1989, விசாகம், Software Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 40520
5. பருத்தித்துறை, இந்து, 1995, சதயம், Charted Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 39676
6. கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை
7. மீசாலை - சாவகச்சேரி, இந்து, 1994, மிருகசீரிடம், MBBS, Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 33190
8. தெல்லிப்பளை - புத்தூர், இந்து, 1979, அவிட்டம், CIMA, Charted Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 32638
9. கோப்பாய், இந்து, 1982, சுவாதி, MBBS, Doctor, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.- 31058
10. தும்பளை, இந்து, 1992, பூசம், CIMA Qualified, Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 53204

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (1171)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

# எரிகாயத்திற்குள்ளான இளம் பெண் மரணம்

எரிகாயங்களுக்குள்ளான இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். புலவர் வீதி, நவாலி வடக்கைச் சேர்ந்த ஒரு வயதுக் குழந்தையின் தாயான கஜன் ஜனுஜா(23 வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 20 ஆம் திகதி அடுப்பை எரியூட்டுவதற்காக மண்ணெண்ணையை ஊற்றிய போது மண்ணெண்ணை அவரது ஆடையில் பட்டதால், எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று முன்தினம்(25) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.(ரு-4,7)

## சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

யாழ். நகரப் பகுதியில் இயங்கிவரும் சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. (4352)

077 985 8327
077 979 9855

## வீடு வாடகைக்கு உண்டு

கல்வியங்காடு சந்திக்கு அருகில் Main Road இல் 2 அறை, 1 Hall, 1 office Room நிறுவனங்கள், களஞ்சியங்கள் விரும்பத்தக்கது. (4389)

தொடர்புகளுக்கு :
077 627 3493

## லொத்தர் விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, இணுவில், கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு பிரதேசங்களிற்கு ரிக்கட் விற்பனையாளர் தேவை. (4393)

தொடர்புகளுக்கு :
077 122 8841

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3056)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Main Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை


V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3056)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியோரமாக 28 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீதியோர முகப்பு 300 அடி நீளம் கொண்டது. ஒரு பரப்பின் விலை 38 லட்சம் மட்டுமே. பிரித்து வழங்கப்படமாட்டாது. (4392)

தொடர்புகளுக்கு :
076 742 4301, 075 710 9639

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



மலர்வு 04.04.1945
உதிர்வு 06.06.2024

கடந்த 06.06.2024 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் பொன்னுத்துரை சிவலிங்கம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று 27.05.2025 செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (1152)

பாரதி வீதி,
கம்பர்மலை, உடுப்பிட்டி வடக்கு

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அலுவலர்

### பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக்குருக்கள் பிரபாகரசர்மா



அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மீளாத்துயர் கொள்கிறோம். அவரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (C-3054)

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை
முன்னாள் அதிகாரிகளும் சக ஊழியர்களும்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கொக்குவில் மேற்கு பொன்னையா வீதியை
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் இரத்தினம் இராஜேஸ்வரி



உங்கள் மதிமுகமும் மகிழ்வான பேச்சும்
அழகான புன் சிரிப்பும் மறைந்து ஒரு வருடம்
ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதில் இருக்கும்
எண்ணிப் பார்க்க இதயங்கள் கனக்கின்றன
எமக்கு ஆறுதலாக இருந்த
உங்கள் நினைவுகள் ஒரு போதும்
எம்மை விட்டுப் பிரியாது.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-3053)

மலர்வு 09.06.1937
உதிர்வு 07.06.2024

தகவல்:
London
கழுக்குன்றன் (மருமகன்)
ராஜினிமலர் (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.